08.08.2024 அ.வ. எண். 74/2016 வா.சா.1 வரலட்சுமி

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பாகம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண். 278/1சி. தாவா சொத்தின் பரப்பளவு 16 x 135. தாவா சொத்து என் மாமனார் கண்ணப்ப முதலியாருக்கு பாத்தியப்பட்டது. கண்ணப்ப முதலியாருக்கு 1, 2 பிரதிவாதிகளும், என்னுடைய கணவரும், 4, 5 வாதிகளும் வாரிசுகள். எனக்கு 1986 ஆம் ஆண்டு திருமணம் ஆனது. என் தாயார் வீடு பெங்களூர். திருமணம் ஆகி 3 வருடங்களுக்கு பிறகு பெங்களூருக்கு சென்றோம், அதன்பிறகு மீண்டும் குழந்தைகளை படிக்கவைக்க இங்கே வந்துவிட்டோம். 2004 ஆம் ஆண்டு வரை இங்கிருந்தோம் அதன்பிறகு பெங்களூர் சென்றோம். அதன்பிறகு பெங்களூரில் தான் இருந்து வருகிறோம். என் கணவர் 2005 ஆம் ஆண்டு பெங்களூரில் இறந்தார். தாவா சொத்தின் தரைதளத்தில் ஒரு கடையும், முதல்தளத்தில் 4 கடைகளும், பின்னால் வீடும் உள்ளது. 2ம் பிரதிவாதி தான் கடை வாடகைகளை வாங்கிவருகிறார். தாவா சொத்தை வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் எங்கள் வீட்டை நாங்கள் பூட்டி வைத்துள்ளோம். என் மாமனார் கண்ணப்ப முதலியார் தாவா சொத்தை 1976 ஆம் ஆண்டு வாங்கியதாக என் கணவர் சொன்னார். தாவா சொத்தை காலிமனையாக தான் வாங்கினார். 2ம் பிரதிவாதியின் வருமானத்தை கொண்டு தான் தாவா சொத்தில் கடைகள் கட்டப்பட்டது என்று சொன்னால் தவறு. 4, 5 வாதிகளுக்கும் 2ம் பிரதிவாதி தான் திருமணம் செய்துவைத்தார் என்று சொன்னால் தவறு, என் மாமனார் தான் செய்துவைத்தார். என் மாமனார் கண்ணப்ப முதலியார், மாமியார் சரோஜா இருவரும் இறந்துவிட்டார்கள். மாமனார், மாமியாருக்கு இறுதிச்சடங்கை 2ம் பிரதிவாதி தான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல, நாங்கள் சேர்ந்து தான் செய்தோம். மாமனார் மாமியாரை 2ம் பிரதிவாதி தான் பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் மாமனார் கண்ணப்ப முதலியார் தாவா சொத்தை 1984 ஆம் ஆண்டிற்கு முன்பே 2ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார் என்றும், 2ம் பிரதிவாதி தாவா சொத்தை 40 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, 2007 ஆம்

ஆண்டு தான் கடன் அடைக்கப்பட்டது. கடன் அடைத்ததாக கூறுவது தவறு என்றும், கடன் அடைத்த காரணத்தினால் தான் என் மாமனார் கண்ணப்ப முதலியார் 2ம் பிரதிவாதிக்கு சொத்தை ஒப்படைத்தார் என்று சொன்னால் தவறு. தாவா சொத்தை 2ம் பிரதிவாதி 40 ஆண்டுகாலம் அனுபவித்ததை நான் எப்போதும் ஆட்சேபனை செய்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு 2ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது. குடிநீர் கட்டணம், மின்சார கட்டணம் ஆகியவைகளை 2ம் பிரதிவாதி தான் செலுத்திவருகிறார் என்றால் வாடகை வாங்கி செலுத்திவருகிறார். குடும்ப கடனை சேர்ந்து திருப்பி செலுத்தியதாகவும், என் மாமனார், மாமியாரை சேர்ந்து பராமரித்து வந்ததாகவும் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பேரில் அறிஞர் அண்ணா கூட்டுறவு சங்கத்தில் வாங்கிய கடனை 2ம் பிரதிவாதி தான் திருப்பி செலுத்தினார் என்றால் தவறு, நாங்கள் சேர்ந்து தான் செலுத்தினோம். 2ம் பிரதிவாதியிடம் ரூ.75,000/- கடன் வாங்கியிருந்தேன் என்றால் இவரிடம் வாங்கவில்லை, 2ம் பிரதிவாதியின் மருமகனிடம் வாங்கியிருந்தேன். 2ம் பிரதிவாதியின் மருமகனிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்தாததால் அவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.2ம் பிரதிவாதியின் மருமகன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், அந்த வழக்கில் செய்தித்தாள் மூலம் எனக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது என்று சொன்னால் தவறு. 2ம் பிரதிவாதியின் மருமகனிடம் வாங்கிய கடனை அவரிடமே நான் திருப்பி செலுத்திவிட்டேன். தாவா சொத்தில் விக்னேஷ்வரா என்ற பெயரில் 2ம் பிரதிவாதி ஓட்டல் நடத்திவருகிறார். தாவா சொத்தில் நானும், 1ம் பிரதிவாதியும் வாடகைதாரர்கள் என்ற முறையில் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. செய்யாறு காவல்நிலையத்தில் 2ம் பிரதிவாதி எங்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் நாங்கள் தான் அடிக்க வருகிறார் என்று புகார் கொடுத்தோம். வீட்டில் பெரியவர்களை வைத்து பாகம் கேட்டோம் 2ம் பிரதிவாதி ஒப்புக்கொள்ளவில்லை. 2ம் பிரதிவாதி எங்கள் மீது

அ.வ.எண்.43/2021 வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி அனுபவத்திற்கு இடையூறு செய்தோம் என்றால் அவர் இடையூறு செய்ததால் நாங்களும் இடையூறு செய்தோம். தாவா சொத்தில் நாங்கள் எந்த உரிமையும் கோரமுடியாது என்றும், தாவா சொத்தின் உரிமையாளர் உயிருடன் இருந்தபோதே தாவா சொத்து 2ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணை உறுதிக்கூற்றில் கூறியுள்ள சங்கதிகள் தவறானது என்றும், அதனால் நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றும், 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அ.வ.எண். 43/2021 வழக்கு தீர்ப்பாகவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.